# <u>மாதிரி ஆய்வுக்கட்டுரை (Model Assignment)</u>

**தலைப்பு: இயேசுகிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை மற்றும் மனிதத்தன்மை குறித்து *4 பக்க அளவிற்கான ஆய்வுக்கட்டுரை.***

***முன்னுரை:*** ஒவ்வொரு மனிதனின் இரட்சிப்பிற்கு முதுகெலும்பாக விளங்குபவர் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துதான் என்று சொன்னால் அது மிகையாகாது. அவரை தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிற அனைவரும் இரட்சிக்கப்படுகிறார்கள் என்று வேதம் நமக்கு சொல்லுகிறது (யோவான் 3:16). அவரில்லாமல் நாம் தேவனோடு இணைக்கப்பட முடியாது. தேவன் எங்கும் பரவியிருக்கிற ஒரு தெய்வமாக, அன்பின் சொரூபியாக, அனைவரையும் படைத்த ஒரு படைப்பாளியாக இருந்தாலும், அவர் மூலமாய் ஆயத்தம்பண்ணப்பட்ட மனிதனுக்கான இரட்சிப்புக்கு இயேசுகிறிஸ்துவே முதுகெலும்பாக இருக்கிறார். ***கடவுள் எங்கும் நிறைந்திருப்பது, கடவுள் எங்கும் இருக்கிறார் என்று பொருள். கடவுள் எல்லா இடங்களிலும் இருக்கிறார் என்றால், அவர் எல்லா இடங்களிலும் சுறுசுறுப்பாக இருக்கிறார் மற்றும் எல்லா இடங்களிலும் நடக்கும் அனைத்தையும் பற்றிய முழு அறிவையும் பெற்றிருக்கிறார்.*** (The omnipresence of God is meant that God is everywhere present. If God is everywhere present, He is everywhere active and posses full knowledge of all that transpires in every place (Ps.139:7-12; Jer.23:23-24; Acts 17:27-28; Heb.4:13) [1] தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து, தீர்க்கதரிசிகளின் மூலமாக முன்னுரைக்கப்பட்டபடியே, மனிதனில் ஒரு மனிதனாக, மனுவுருவெடுத்து, அவர் படைத்த இந்த பூமியில் நம்மைப்போல ஒரு மனிதானகப் பிறந்தார். தேவன் மனிதனாகப் பிறந்தார். இது சாத்தியமா? தேவன் மனிதனாகப் பிறக்க வேண்டுமா? அவர் மனிதனாகப் பிறந்தால், அவர் எவ்வாறு தெய்வமாக இருக்க முடியும்? என்கிற கேள்விகளுக்கான இறையியில் பதிலை நாம் இந்த ஆய்வுக்கட்டுரையில் சற்று விளக்கமாக பார்ப்போம்.

<u>**இயேசுவிலிருந்த தெய்வீகத்தன்மை:**</u> இயேசுவிலிருந்த அல்லது இயேசுவின் தெய்வீகத்தன்மையை அல்லது அவர் தெய்வமாக இருந்தார் என்பதை புரிந்துகொள்வதற்கு நமக்கு வேத வசனங்கள்தான் ஆதாரமாக இருக்கிறது, அதை மத்தேயு 3:17-ல் நாம் பார்க்கிறோம், 'அன்றியும் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.' இதை நம்முடைய

[1] William Evans, The great doctrine of the Bible (Chicago: Moody press, 1965).

குறைவான மூளை அறிவினால் ஏற்றுக்கொள்வது அல்லது புரிந்துகொள்வது என்பது இயலாத காரியம் என்பதை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். மேற்ச்சொன்ன வசனமானது, இயேசுகிறிஸ்து ஏறக்குறைய 30 வயதாக இருக்கும்போது, தேவனால் உறுதிசெய்யப்பட்ட ஒன்றாகும். தேவனுடைய நேசகுமாரன், தேவன்தான். ***கடவுளின் குணாதிசயங்கள் தெய்வீக இயல்பின் தனித்துவமான பண்புகளாகும், அவை கடவுளின் யோசனையிலிருந்து பிரிக்க முடியாதவை மற்றும் அவரது உயிரினங்களுக்கு அவரது பல்வேறு வெளிப்பாடுகளுக்கு அடிப்படையாகவும், அடித்தளமாகவும் உள்ளன.*** (The attributes of God are those distinguishing characteristic of the divine nature, which are inseparable from the idea of God and which constitute the basis and ground for His various manifestations to His creatures).[2] அதுதானே உண்மை. அவர் மனிதனாக, மனித சரீரத்தைப்பெறுவதற்கு, ஒரு மனிதன் தேவைப்பட்டான்.

**<u>இயேசுவின் சரீரப்பிறப்பிற்கான தீர்க்கதரிசனம்:</u>** ஆதியாகமம் 3:15-ம் வசனத்தில் தேவன் இவ்வாறு கூறுகிறார், 'உனக்கும், ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன், அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.' தேவ சாயலில் உண்டாக்கப்பட்ட மகிமையின் மனிதனை ஏமாற்றி, தேவனை விட்டு பிரித்து, தனக்கு அடிமையாக்கிவிட்ட சாத்தானின் அதிகாரத்திலிருந்து, மனிதனை மீட்கும் ஒரு பலமானவராக, இரட்சகராக தேவகுமாரன், ஸ்திரீயின் வித்திலிருந்து பிறந்தார். **இங்கு நாம் ஒன்றை கவனிக்க வேண்டும், இயேசு மனிதனின் அல்லது மாம்சத்தின் வித்தல்ல, ஸ்தீரியின் வித்தான சரீரமாகத்தான், மனித சாயலானார்.** அவரின் சரீரம் மனித சாயல், அவரின் ஆவி மற்றும் ஆத்துமா ஆகிய இரண்டும் அதாவது, நித்தியமானதொரு பொருள்கள்களான (மற்றொன்றிலிருந்து தனிவேறாக அமைவதும், தனித்துவம் உடையதுமான ஒன்று, தனிப்பண்புப்பொருள் - Entity) அழியாத, என்றென்றும் நிலைத்துநிற்கிற தேவசாயல் என்பதை நாம் மானுடவியல், பல்வேறு மதங்கள் பற்றிய படிப்புகள், ஆவிகள் பற்றிய படிப்புகள் மற்றும் உடற்கூறியல் ஆகிய படிப்பினைகள் மூலம் அறிந்துகொள்ளலாம். ***'உயர்ந்த சுயத்தில்' உள்ள அனைத்து மனிதர்களும் அழியாதவர்கள், ஆனால் அவர்களின் ஆளுமைகள் தங்கள் தெய்வீக இயல்புடனான தொடர்வைப்பற்றி அறியாமல் உள்ளனர், மேலும் அவர்கள் இருவரின் ஒற்றுமையை பாதிக்க முயற்சிக்கிறவரைக்கும் அழிந்துவிடும்.*** (All human beings in their 'Higher Selves' are immortal, but their personalities are

---

[2] Augustus Hopkins strong, Systematic Theology, Vol.1 (Chicago: The Judson press, 1961), 265.

unconscious of the link with their Divine Nature and will perish unless they strive to affect a union of the two.[3]

**இயேசு இவ்வுலகில் ஒரு மனிதனைப்போலவே வாழ்ந்தார் என்பதற்கான வரலாற்று மற்றும் வேத சான்றுகள்:** இதற்கான வரலாற்று சான்றுகள் நமக்கு அநேகம் கிடைக்கப்பெறுகின்றன (மத்.2:6-7, 2:19-21, 4:13-17). இயேசு குழந்தையாக மரியாளின் வயிற்றில் பிறந்தார், எகிப்திற்கு எடுத்துச்செல்லப்பட்டார், சாஸ்திரிகளால் கனப்படுத்தப்பட்டார், யோவானால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டார். அவர் காலத்தில் வாழ்ந்த மற்ற மனிதர்களைப்போல உண்டு, உறங்கி, யூதேயா தேசமெங்கிலும் **சுற்றித்திரிந்து**, தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்து மக்களுக்கு **பிரசங்கித்தார்**. 4 சுவிசேஷ புத்தகங்களிலும் நாம் அநேகமான சம்பவங்களை படித்து அறிந்துகொள்ள முடிகிறது.

**இயேசு இவ்வுலகில் தேவனாக, தெய்வீகத்தன்மையுடையவராக வாழ்ந்தார் என்பதற்கான வரலாற்று மற்றும் வேத சான்றுகள்:** தேவன் அல்லது கடவுள் என்பவர் இயற்கைக்கு அப்பாற்பட்டவராக, மனித சக்திக்கும், அறிவுக்கும் அப்பாற்பட்டவராக தன்னுடைய செயலில், தன்மையில் இருக்கவேண்டும் என்பதுதான் ஒரு சராசரி மனிதனின் புரிந்துகொள்ளுதலாக இருக்கிறது. அதை உறுதிப்படுத்தும் விதமாக, இயேசு ஒரு கன்னியின் (தாவீது இராஜாவின் வம்சாவழி வந்தவர்) வயிற்றில், பரிசுத்த ஆவியினால் (கடவுளின் சாராம்சம் - Entity) கர்ப்பந்தரித்து தெய்வத்தில் தெய்வமாகவும், பரிசுத்தராகவும், மனிதனில் மனிதனாகவும் தோன்றினார். ***கடவுளின் பரிசுத்தத்தின் மூலம், அவர் தனது படைப்புகளிடமிருந்து முற்றிலும் தனித்தனியாகவும், உயர்ந்தவராகவும் இருக்கிறார் என்றும், அவர் தார்மீக தீமை மற்றும் பாவத்திலிருந்து சமமாக வேறுபட்டவர் என்றும் நாம் அர்த்தப்படுத்துகிறோம். அவர் உலகில் உள்ள தீயவற்றால் தீண்டப்படாதவர் மற்றும் கஷ்டப்படாதவர்.*** (By the holiness of God, we meant that He is absolutely separate from and exalted above all His creatures and that He is equally separate from moral evil and sin. He is untouched and unstrained by the evil in the world (Exo.15:11; 1 Sam.2:2; Isa.6:3; 1 Pe.1:16; James 1:13; Ps.99:9; Is.57:15)[4] மனித சக்திக்கு, இயற்கை நியதிகளுக்கு அப்பாற்பட்ட முறையில் அசாத்தியமான ஒருவரானார். அவர் இரட்சகர் (மத்.1:21) என்றும், மேசியா ((மத்.1:16) என்றும், இம்மானுவேல் (மத்.1:23) என்றும் தேவ தூதர்களால் அறிவிக்கப்பட்டார். அவர் அற்புதங்களைச் செய்தார், மரித்தவர்களை உயிரோடெழுப்பினார், அசுத்த ஆவிகளை துரத்தினார், கடலின் மீது நடந்தார், மனிதனின் பாவ மீட்புக்கான தியாக செயல்களை செய்து, சரீர மரணமடைந்த 3 நாட்களுக்குப்பின், மீண்டும் உயிரோடெழுந்து, தம்முடைய சீஷர்களோடு பேசினார், உணவு உட்கொண்டார், தேவனைப்போலவே வாக்குத்தத்தங்களைக் கொடுத்தார்.

---

[3] http://en.wikipedia.org/wiki/Theosophy.26.10.2022

[4] Henry Clarence Theissen, Lecture in Systematic Theology (Michigan: W.B.Eerdmans Publishing Company, 1949).

***முடிவுரை***: நாம் ஆதி திருச்சபையின் வரலாற்றை கவனமாகவும் உன்னிப்பாகவும் கவனிக்கிறபோது, இயேசு கிறிஸ்துவைக் குறித்த பல்வேறு கள்ளப்போதனைகளும், கருத்துக்களும் திருச்சபையிலிருந்த விசுவாச மக்களை அதிகமாக குழப்பிக்கொண்டிருந்தன. குறிப்பாக அவருடைய தெய்வீகத்தன்மை மற்றும் மனிதத்தன்மை ஆகியவற்றைக்குறித்து சரியான இறையியல் விளக்கங்கள் மற்றும் சத்தியத்தை சத்தியமாக அறியாதவர்களாக இருந்தபடியினால், சபைகள் வளர முடியாமல் பல்வேறு சமய மற்றும் தத்துவக்கொள்கைகளினால், கடல் அலைகளைப்போல அலசடிப்பட்டுக்கொண்டிருந்தன. ஆனால், நம்முடைய சபை முற்பிதாக்கள், தேவ கிருபையைப் பெற்று, தேவ வசனங்களை அர்ப்பணிப்போடு தியானித்து, கற்றறிந்தபடியினால், நாம் இந்த கட்டுரையில் ஒருசில உறுதியான இறையியில் சத்தியங்களை அவர்களிடமிருந்தும், வேதத்திலிருந்தும் கற்றுக்கொள்ள முடிகிறது. இயேசுகிறிஸ்து, உண்மையில் தெய்வத்தில் தெய்வமானவராகவும், மனிதனில் மனிதராகவும், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி, மனிதனுக்கு இரட்சிப்பை உண்டுபண்ணி, உயர்த்தப்பட்டவராக, பிதாவோடு வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்பதை நாம் விசுவாசித்து, நம்முடைய சிந்தையை கிறிஸ்துவின்மேல் பதித்து, தேவனை நோக்கி முன்னேறிச்செல்வோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

## **Bibliography**


Evans William, The great doctrine of the Bible (Chicago: Moody press, 1965).

http://en.wikipedia.org/wiki/Theosophy.26.10.2022.

Augustus Hopkins, Systematic Theology, Vol.1 (Chicago: The Judson press, 1961).

Theissen, Henry Clarence, Lecture in Systematic Theology (Michigan: W.B.Eerdmans Publishing Company, 1949).